2146

OL/2023(2024)/63/T-I, II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**63 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

| | |
|---|---|
| ව්‍යවසායකත්ව අධ්‍යයනය **I, II** | පැය තුනයි |
| முயற்சியாண்மைக் கற்கை **I, II** | மூன்று மணித்தியாலம் |
| Entrepreneurship Studies **I, II** | Three hours |

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## முயற்சியாண்மைக் கற்கை I

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** கொவிட் நோய்த் தொற்றுப் பரவல் காலத்தில் சிவா என்பவர் தொற்றுநீக்கி திரவத்தை விற்பனை செய்யும் வணிகத்தை ஆரம்பித்ததுடன் அது வெற்றிகரமாக விரிவுபடுத்தப்பட்டது. இது தொடர்பிலான விசேட முயற்சியாண்மைக் குணாம்சம்
(1) நம்பிக்கையுடன் இருத்தல் (2) சூழல்சார் உணர்திறன்
(3) விடாமுயற்சி (4) சுதந்திரம்

**2.** முயற்சியாண்மை என்பது,
(1) பரம்பரையாகத் தோன்றியது.
(2) கல்வி ஊடாக மாத்திரம் அபிவிருத்தி செய்யப்படுவது.
(3) தர்க்கரீதியான மனித சிந்தனையுடன் தொடர்புடையது.
(4) அனுபவங்கள் ஊடாக மாத்திரம் பெறப்படுவது.

**3.** இணையத்தினூடாக சந்தாக் கட்டணத்தைச் செலுத்தி திரைப்படங்களைப் பார்வையிடுவதற்கான வாய்ப்பை திரைப்படப் பிரியர்களுக்கு வழங்குவது கருதப்படுவது
(1) ஒரு புதிய கண்டுபிடிப்பாக (2) ஒரு பிரதிபண்ணலாக
(3) ஒரு விரிவாக்கமாக (4) ஒரு இணைப்பாக

**4.** புத்தாக்கம் தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) புத்தாக்கம் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒரு நிகழ்வாகும்.
(2) புத்தாக்கத்தின் மூலமானது ஆக்கத்திறன் எண்ணமாகும்.
(3) புத்தாக்கமானது மக்களின் மாற்றமடையும் மனப்பாங்கின் மீது தங்கியிருப்பதில்லை.
(4) புத்தாக்கமானது நுகர்வோரது மாற்றமடையும் தேவைகளின் மீது தங்கியிருப்பதில்லை.

**5.** சேவை ஒன்றின் குணாம்சத்தைக் குறித்து நிற்கும் கூற்றைத் தெரிவுசெய்க.
(1) சேவைச் செயன்முறையானது சூழ்நிலைக்கேற்ப மாற்றத்திற்குள்ளாவதில்லை.
(2) எப்பொழுதும் சேவையின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க முடியும்.
(3) சேவையானது வழங்குனரில் இருந்து வேறுபடுத்தப்படக்கூடிய ஒரு செயன்முறை ஆகும்.
(4) பெரும்பாலான நேரத்தில் நுகர்வோர், உற்பத்திச் செயன்முறையின் ஒரு பகுதியாவர்.

**6.** மங்களபுர பெண்கள் அமைப்பானது பெண்களின் வேலையின்மையைத் தடுப்பதற்காக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நிலக்கடலைச் செய்கையை பிரபல்யப்படுத்துவதற்கு ஆதரவளித்தது. இந்த மங்களபுர பெண்கள் அமைப்பை இனங்காணமுடிவது
(1) அக முயற்சியாளராக (2) நிறுவக முயற்சியாளராக
(3) சமூக முயற்சியாளராக (4) வணிக முயற்சியாளராக

[பக். 2 ஐப் பார்க்க

7. தனது நிறுவன ஊழியர்களின் எதிர்மறையான மனப்பாங்கை மாற்றுவதற்காக முயற்சியாளர் ஒருவரால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் உரித்தானதாகும் வகிபாகம்
(1) உடைமையாளர் (2) தலைவர் (3) முகாமையாளர் (4) முதலீட்டாளர்

8. வணிகச்சூழலை விபரிக்கும் விடையைத் தெரிவுசெய்க.
(1) வணிகத்துக்குள்ளே இருந்து நேர்மறையாக வணிக நடவடிக்கைகள் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற சகல காரணிகளும் விசைகளும் ஆகும்.
(2) வணிகத்துக்குள்ளே இருந்து எதிர்மறையாக வணிக நடவடிக்கைகள் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற சகல காரணிகளும் விசைகளும் ஆகும்.
(3) வணிகத்துக்குள்ளேயும் வெளியேயும் இருந்து நேர்மறையாக வணிக நடவடிக்கைகள் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற சகல காரணிகளும் விசைகளும் ஆகும்.
(4) வணிகத்துக்குள்ளேயும் வெளியேயும் இருந்து நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் வணிக நடவடிக்கைகள் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற சகல காரணிகளும் விசைகளும் ஆகும்.

9. உற்சவ காலத்தின்போது முட்டை இறக்குமதியை வரையறுத்தலானது உள்ளூர் முட்டை விநியோகத்தர்களுக்கு ஒரு
(1) பலமாகும். (2) வாய்ப்பாகும். (3) அச்சுறுத்தலாகும். (4) பலவீனமாகும்.

10. வணிகமொன்றின் அகச்சூழல் காரணிகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) சட்டச் சூழல், முகாமையாளர்கள், ஊழியர்கள்
(2) உடைமையாளர்கள், கலாசார சூழல், ஊழியர்கள்
(3) முகாமையாளர்கள், வாடிக்கையாளர்கள், உடைமையாளர்கள்
(4) உடைமையாளர்கள், முகாமையாளர்கள், ஊழியர்கள்

11. வணிகமொன்றின் புறச்சூழலின் உண்மையான மாற்றங்களைப் புரிந்து கொள்வதன் மூலம் முயற்சியாளரால் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள்
(1) வணிகத்தின் பலங்களை இனங்காண முடிதல்.
(2) வணிகமானது முகங்கொடுக்கும் பலவீனங்களை இனங்காண முடிதல்.
(3) வணிகத்துக்கான பல்வேறு வணிக வாயப்புக்கள் காணப்படுவதை இனங்காண முடிதல்.
(4) தமது தீர்மானம் எடுக்கும் ஆற்றலை விருத்தி செய்ய முடிதல்.

12. சந்தை வெளியை சிறப்பாகக் கற்றுக்கொண்டதன் மூலம் ஆரம்பிக்கப்பட்ட ஒரு வணிகம்
(1) நீரிழிவு நோயாளர்களுக்காக விசேட வகை உணவுகளைத் தயாரித்தல்.
(2) சிறிய குழந்தைகளுக்காகப் புதிய வடிவமைப்புக்களுடன் ஆடைகளை உருவாக்குதல்.
(3) பழச்சாற்றைப் பயன்படுத்தி குளிர்பானப் பொதிகளைத் (packets) தயாரித்தல்.
(4) உள்ளூர் உணவு வாசனைக்குப் பயன்படுத்தக்கூடியதாக கறித்தூள் (curry powder) பொதிகளைத் தயாரித்தல்.

13. இலங்கையில் தற்போது இணையத்தினூடாக கற்கைநெறிகள் மேற்கொள்ளப்படுவதினை பெருமளவில் காணமுடிகிறது. இப்புத்தாக்கத்திற்கான பிரதான மூலத்தின் அடிப்படை
(1) சந்தையின் மாற்றங்கள்
(2) செயன்முறைத் தேவைப்பாடுகள்
(3) குடித்தொகை சூழலிலும் வாழ்க்கைப் பாங்கிலும் ஏற்படும் மாற்றங்கள்
(4) புலனுணர்வு அல்லது புரிந்துகொள்ளல் மாற்றங்கள்

14. இயற்கைச் சூழலில் இருந்து பெறப்படும் வளங்களை மாற்றத்திற்கு உட்படுத்தாது அவ்வாறே பயன்படுத்தல் உரித்தாவது
(1) இரண்டாம் நிலைத் துறைக்காகும். (2) உற்பத்தித் துறைக்காகும்.
(3) மூன்றாம் நிலைத் துறைக்காகும். (4) முதனிலைத் துறைக்காகும்.

15. சாந்தன் என்பவர் தனியார் தொழிற்கல்வி நிறுவகமொன்றின் உடைமையாளர் ஆவார். இவர் ஒரு வருட கால கணினி தொழினுட்பக் கற்கைநெறியை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றார். இது
(1) தற்போது காணப்படும் சேவையை தற்போது காணப்படும் சந்தைக்கு முன்வைத்தலாகும்.
(2) தற்போது காணப்படும் சேவையை புதிய சந்தைக்கு முன்வைத்தலாகும்.
(3) புதிய சேவையை தற்போது காணப்படும் சந்தைக்கு முன்வைத்தலாகும்.
(4) புதிய சேவையை புதிய சந்தைக்கு முன்வைத்தலாகும்.

[பக். 3 ஐப் பார்க்க

**16.** இலங்கையின் பொருளாதாரத்தில் இரண்டாம் நிலை வணிகத் துறைக்கு உரித்தான வணிகம் ஒன்று
(1) போக்குவரத்து (2) கட்டட நிர்மாணம் (3) மீன்பிடி (4) விவசாயம்

**17.** வங்கி ஒன்று ஓய்வு பெற்றவர்களுக்காக விசேட வங்கிக் கணக்கொன்றை அறிமுகப்படுத்தியதன் பின்னர், ஏனைய வங்கிகளும் அதனைப் பின்பற்றினர். இது
(1) வெகுஜன ஊடகத்தின் ஊடாக வணிக எண்ணமானது புத்துருவாதல் ஆகும்.
(2) வழங்குனர் ஊடாக வணிக எண்ணமானது புத்துருவாதல் ஆகும்.
(3) சந்தை அளவையாய்வின் ஊடாக வணிக எண்ணமானது புத்துருவாதல் ஆகும்.
(4) போட்டியைக் கற்றுக்கொண்டதன் ஊடாக வணிக எண்ணமானது புத்துருவாதல் ஆகும்.

**18.** சுதா என்பவர் சிங்கராஜ வனத்தை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலா ஓய்வு விடுதி ஒன்றை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்தார். அவரது இந்த வணிக எண்ணம் தோன்றுவதில் தாக்கம் **செலுத்தாதது**
(1) இயற்கை வளங்கள் (2) இயற்கைக் காடுகள்
(3) விலங்கினங்கள் (4) கலாசார வளங்கள்

**19.** அதிகளவான பொறுப்புணர்வு, வரையறுத்த நேரம், நிச்சயமற்ற எதிர்காலம் போன்ற காரணிகள் முயற்சியாண்மையின்போது கருதப்படுவது
(1) சூழல் காரணிகளாக (2) சவால் காரணிகளாக
(3) உற்பத்திக் காரணிகளாக (4) அகக் காரணிகளாக

**20.** வணிகமொன்றின் சிற்றினச் சூழல் விசை ஒன்று
(1) உடைமையாளர்கள் (2) போட்டியாளர்கள்
(3) முகாமையாளர்கள் (4) வெளிநாட்டு முதலீட்டாளர்கள்

**21.** வணிக எண்ணத்தை உருவாக்குவதற்கு முயற்சியாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைத் தேவை யாது?
(1) அக்கறையும் அர்ப்பணிப்பும் (2) ஆற்றலும் விருப்பமும்
(3) விருப்பமும் ஆக்கத்திறனும் (4) ஆக்கத்திறனும் புத்தாக்கமும்

**22.** சரியான செயன்முறையைப் பின்பற்றுவதன் மூலம் தனது நிறுவனத்துக்குச் சிறந்த ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்கின்ற முயற்சியாளர் ஒருவரின் ஆற்றல் கருதப்படுவது
(1) மானிடத் திறன்களாக (2) எண்ணக்கருவாக்கத் திறன்களாக
(3) ஆலோசனைத் திறன்களாக (4) தொழினுட்பத் திறன்களாக

**23.** கமலன் என்பவர் கைகள், கால்களின் உணர்வின்மையைக் குறைப்பதற்காக மிகவும் இலகுவான மசாஜ் கருவி ஒன்றை உற்பத்தி செய்யத் தீர்மானித்தார். இதற்காகப் பெரும்பாலும் வேண்டப்படும் முயற்சியாண்மைக் குணாம்சம்
(1) ஆக்கத்திறன் (2) அர்ப்பணிப்பு (3) தலைமைத்துவம் (4) தூரநோக்கு

**24.** முயற்சியாண்மைக் கலாசாரத்தினூடாக எந்தவொரு நாடும் உயர்வான பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுக்கொள்ள முடியும். பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கு அப்பொருளாதாரத்தில்
(1) ஊழியர் நலன்கள் உயர்வான மட்டத்தில் பேணப்படல் வேண்டும்.
(2) உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், சேவைகளின் அளவு விருத்தி செய்யப்படல் வேண்டும்.
(3) சகல மானிட மற்றும் மானிடம் சாரா வளங்களும் பயன்படுத்தப்படல் வேண்டும்.
(4) நாட்டில் காணப்படும் மனப்பாங்குகள், நம்பிக்கைகள், சடங்குகளின் பிரகாரம் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**25.** முயற்சியாளர் ஒருவர் வணிகத்தைக் கொண்டு நடாத்தும்போது அவர் ஒழுக்க நியதிகளின்படி செயற்படல் வேண்டும். இங்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியது
(1) வழங்குனர்களுக்கு (2) வாடிக்கையாளர்களுக்கு
(3) போட்டியாளர்களுக்கு (4) ஊழியர்களுக்கு

**26.** முயற்சியாண்மைக் கலாசாரத்தைக் கொண்ட நபரொருவரின் குணாம்சம் **அல்லாதது** எது?
(1) ஆக்கத்திறன் (2) இடரை ஏற்கும் ஆற்றல்
(3) நேர்மறையான சிந்தனை (4) உடனடியாக முடிவுகளை எதிர்பார்த்தல்

[பக். 4 ஐப் பார்க்க

27. உயர் கல்வியைப் பெறுவதன் ஊடாக வணிகங்களை ஆரம்பிப்பதற்கு பெண்கள் ஊக்கப்படுத்தப்படுகின்றார்கள். இதற்கான அடிப்படைக் காரணம்
(1) மென்மைத் தன்மை
(2) இரக்க சுபாவம்
(3) சுதந்திரம்
(4) அர்ப்பணிப்பு

28. சல்மான் என்பவர் வரையறுத்த வளங்களை தனது வணிகத்திற்காக வினைத்திறனாகப் பயன்படுத்துகின்றார். இதன் மூலம் சல்மான் நிறைவேற்றுவது
(1) பொருளாதாரப் பொறுப்பை
(2) சட்டப் பொறுப்பை
(3) ஒழுக்கப் பொறுப்பை
(4) பொதுநலப் பொறுப்பை

29. ஒரு கவர்ச்சிகரமான முதலீட்டு எண்ணத்தின் அடிப்படைக் குணாம்சம்
(1) இடரை ஏற்றுக்கொள்வதற்கான போதுமான அளவு அனுகூலம் காணப்படல்.
(2) கேள்விக்கான போதுமான அளவு நிரம்பல் காணப்படல்.
(3) போதுமான அளவு வாடிக்கையாளர்கள் காணப்படல்.
(4) போதுமான அளவு போட்டியாளர்கள் காணப்படல்.

30. இலங்கையின் பொதுத்துறை நிறுவனங்கள் ஒவ்வொன்றும்
(1) இலாபம் உழைக்கின்றன.
(2) அரசுக்குச் சொந்தமானவை.
(3) சேவைகளை மாத்திரம் வழங்குகின்றன.
(4) நலன்புரி சேவைகளை மாத்திரம் வழங்குகின்றன.

31. தனியுடைமை வணிகத்திற்கான 'வியாபாரப் பெயர்ப்பதிவுச் சான்றிதழ்' வழங்கப்படுவது
(1) மாவட்ட செயலாளர் மூலம்
(2) பிரதேச செயலாளர் மூலம்
(3) நகர சபை நகரபிதா (Mayor) மூலம்
(4) பிரதேச சபைத் தலைவர் மூலம்

32. நாரதா என்பவர் தனது வணிகத்துக்காக தானே முதலீடு செய்வதற்கும், தனது முதலீட்டின் அளவுக்கு மாத்திரம் பொறுப்பை வரையறுப்பதுடன், வணிக நடவடிக்கைகளுக்காக சட்டத்தின்படி தனது சொந்தப் பெயரை முன்வைக்காமல் இருப்பதற்கும் எதிர்பார்க்கின்றார். இவரது எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு மிகவும் பொருத்தமான வணிக நிறுவன வகை யாது?
(1) தனியுடைமை வணிகம்
(2) பங்குடைமை வணிகம்
(3) தனியார் வரையறுத்த கம்பனி
(4) பொது வரையறுத்த கம்பனி

33. வணிகமொன்றின் சந்தைப்படுத்தல் திட்டத்தைத் தயாரிப்பதற்கான முதலாவது படிமுறை
(1) சந்தையைப் பகுப்பாய்வு செய்தல்
(2) விற்பனை வருமானத்தை எதிர்வுகூறல்
(3) எதிர்பார்க்கப்பட்ட அலகு விற்பனை விலையைத் தீர்மானித்தல்
(4) சந்தைக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பொருட்கள், சேவைகளைக் கணிப்பிடுதல்

34. உற்பத்திச் செயன்முறை ஒன்றில் உள்ளீடு மற்றும் வெளியீட்டுக்கான உதாரணங்களை முறையே குறித்து நிற்கும் விடையைத் தெரிவுசெய்க.
(1) தேயிலை - சீனி
(2) மரம் - மேசை
(3) செங்கல் - களிமண்
(4) கூரை ஓடு - சீமெந்து

35. வணிகமொன்றின் உற்பத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்படும் நிலையான சொத்து ஒன்று
(1) பொருட்களை விநியோகிக்கப் பயன்படும் வான்
(2) கடையில் பயன்படுத்தப்படும் தளபாடம்
(3) தொழிற்சாலையில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள்
(4) உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட் சரக்கிருப்பு

36. எதிர்பார்க்கப்பட்ட வணிகமொன்றில் மதிப்பிடப்பட்ட காப்புறுதிச் செலவுகள், தொலைபேசிச் செலவுகள், காகிதாதிகள் செலவுகள் உள்ளடக்கப்பட்டிருப்பது
(1) உற்பத்தித் திட்டத்தில்
(2) சந்தைப்படுத்தல் திட்டத்தில்
(3) நிதித் திட்டத்தில்
(4) நிர்வாகத் திட்டத்தில்

37. பொருட்களை வாங்கி விநியோகிக்கும் சஹ்ரானின் பிரேரிக்கப்பட்ட வணிகத்தின் கட்டடத்திற்கான மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான செலவு கருதப்படுவது
(1) நிர்வாகச் செலவாக
(2) நிதிச் செலவாக
(3) விநியோகச் செலவாக
(4) ஆரம்பிப்பதற்கு முன்னுள்ள செலவாக

[பக். 5 ஐப் பார்க்க

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

**38.** சந்தைக்கு புதிய உற்பத்திப்பொருளை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் முயற்சியாளர் ஒருவருக்கான நிதியை வழங்கும் முதலீட்டாளர் விசேடமாகக் கவனம் செலுத்த வேண்டியது அவ்வணிகத்தின்
(1) சந்தைப்படுத்தற் திட்டத்திற்கு ஆகும். (2) உற்பத்தித் திட்டத்திற்கு ஆகும்.
(3) நிர்வாகத் திட்டத்திற்கு ஆகும். (4) நிதித் திட்டத்திற்கு ஆகும்.

**39.** வணிகமொன்றின் நிதித் திட்டத்தில் இருந்து **வெளிக்கொண்டுவரப்படாத** தகவல்
(1) நிதி முகாமையாளரின் தொழிற்பாடுகள்
(2) தொழிற்படு மூலதனம்
(3) மொத்த நிலையான சொத்துக்கள்
(4) வணிகத்தின் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகள்

**40.** மல்லிகா என்பவர் பூச்சாடிகளைத் தயாரித்து அவற்றை விற்பனை செய்யும் வணிகமொன்றை ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றார். முதல் மாதத்திற்கான எதிர்பார்க்கப்பட்ட கிரயம் வருமாறு

| | ரூ. |
|---|---|
| மூலப்பொருட் கிரயம் ........................................ | 38 000 |
| ஊழியக் கிரயம் ................................................ | 42 000 |
| ஏனைய உற்பத்திச் செலவுகள் ........................ | 7 000 |
| சந்தைப்படுத்தற் செலவுகள் ............................ | 8 000 |
| வணிகப் பதிவுச் செலவுகள் ............................ | 5 000 |

மல்லிகா வணிகத்தின் முதல் மாதத்திற்கான எதிர்பார்க்கப்பட்ட மொத்த உற்பத்திக் கிரயம்
(1) ரூ. 80 000 (2) ரூ. 87 000 (3) ரூ. 95 000 (4) ரூ. 100 000

* *

[பக். 6 ஐப் பார்க்க

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**63 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

| | |
|---|---|
| ව්‍යවසායකත්ව අධ්‍යයනය | I, II |
| முயற்சியாண்மைக் கற்கை | I, II |
| Entrepreneurship Studies | I, II |

## முயற்சியாண்மைக் கற்கை II

※ **முதலாம்** வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** பின்வரும் சம்பவக் கற்கையை கவனமாக வாசித்து, (i) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அஸ்வினி என்பவர் பாடசாலையை விட்டு வெளியேறிய பின்னர், தனது சொந்த வணிகத்தை ஆரம்பிக்கும் எதிர்பார்ப்புடன் பெண்களுக்கான கைப்பையைத் தயாரிக்கும் கற்கைநெறி ஒன்றைப் பின்பற்றினார். தொழிற்சாலையில் அவரது தாய் ஓய்வில்லாமல் பணி புரிவதைக் கண்டு எந்த ஒருவருக்குக் கீழும் தான் வேலை செய்வதில்லை என அவர் தீர்மானித்திருந்தார். தன்னுடன் வேலை செய்யும் சில பெண்கள் எப்பொழுதும் புதிய நவீன பாங்குகளுக்கு (latest style) ஏற்ப தமது கைப்பையை மாற்றுவர் என அஸ்வினியின் தாய் அவருக்குக் கூறினார்.

அஸ்வினி, ஒருநாள் சர்வதேச சந்தைக்கு விரிவுபடுத்தும் எண்ணத்துடன் பெண்களுக்கான கைப்பையை தயாரிக்கும் வணிகத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்தார். சிற்றளவு முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட பிரேரிக்கப்பட்ட கடன் செயற்றிட்டத்தின் கீழ் 6% வருடாந்த வட்டியில் ரூ. 500 000 ஐ கடனாக பெற்றுக்கொள்ள அவர் எதிர்பார்த்ததுடன், வணிகத்திற்காக பெற்றோரிடமிருந்து பெற்றுக்கொண்ட ரூ. 200 000 ஐயும் முதலீடு செய்தார். பிரேரித்த தனது வணிகத்திற்காக அஸ்வினி பின்வருவனவற்றை செய்ய எண்ணினார்.

- ஒவ்வொன்றும் ரூ. 75 000 வீதம் இரண்டு இயந்திரங்களை வாங்குதல்.
- ரூ. 25 000 மாதாந்த வாடகையின் கீழ் கட்டடமொன்றைப் பெறுதல்.
- ஒவ்வொருவருக்கும் ரூ. 40 000 மாதாந்த சம்பளத்தை செலுத்துவதன் அடிப்படையில் கைப்பைகளை தயாரிப்பதற்காக இரண்டு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல்.
- ரூ. 100 000 இற்கு மடிக் கணினி ஒன்றை வாங்குதல்.
- துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி தனது தயாரிப்புக்களை விளம்பரப்படுத்துவதும், நிகழ்நிலை (online) மூலம் கட்டளைகளைப் பெற்று அவற்றை விற்பனை செய்தலும்.
- தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தில் (ICT) சிறந்த அறிவுடைய தனது சகோதரனான ஜனந்தனின் சேவையைப் பெறுவதற்காக அவருக்கு மாதாந்த சம்பளமாக ரூ. 30 000 செலுத்துதல்.

(i) அஸ்வினிக்கு இந்த வணிக எண்ணம் புத்துருவாவதற்குக் காரணமாகவிருந்த **இரண்டு** விடயங்களை எழுதுக.

(ii) சம்பவக் கற்கையைப் பயன்படுத்தி அஸ்வினி பின்வரும் முயற்சியாண்மைக் குணாம்சங்களைக் கொண்டுள்ளாரா என்பதை உறுதிப்படுத்துக.

(அ) சுதந்திரம் (ஆ) எதிர்கால தூரநோக்கு

(iii) அஸ்வினியின் பிரேரிக்கப்பட்ட வணிகத்தின் பலம் ஒன்றையும் வாய்ப்பு ஒன்றையும் குறிப்பிடுக.

(iv) தனது தயாரிப்புக்களை சந்தையில் அறிமுகப்படுத்தும்போது பயன்படுத்துவதற்காக அஸ்வினி எதிர்பார்க்கும் மேம்படுத்தல் முறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(v) தனது வணிகத்தின் ஊடாக அஸ்வினி இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய வழிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

[பக். 7 ஐப் பார்க்க

- அஸ்வினியின் வணிகத் திட்டத்தில் இருந்து எடுக்கப்பட்ட சில தகவல்கள் கீழே தரப்படுகின்றது.

**எதிர்பார்க்கப்பட்ட செலவுகள் :**

| | ரூ. |
|---|---|
| வணிகத் திட்டம் தயாரித்தல் ............ | 5 000 |
| வணிக பதிவுக் கட்டணம் ............ | 2 500 |
| மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்திக்கான ஏனைய பொருட்களின் மாதாந்த கொள்வனவு ............ | 125 000 |
| மாதாந்த விளம்பரப்படுத்தல், விற்பனைச் செலவுகள் ......... | 45 000 |

**எதிர்பார்க்கப்பட்ட வருமானம் :**

| | |
|---|---|
| மாதாந்த விற்பனை வருமானம் ............ | 450 000 |

**வேண்டப்படுவது :**

அஸ்வினியின் பிரேரிக்கப்பட்ட வணிகத்தின் பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(vi) உடைமையாளரின் முதலீடும் மொத்த நிலையான சொத்துக்களும்

(vii) ஆரம்பிப்பதற்கு முன்னரான செலவுகள்

(viii) மொத்த காசு உள்வருகைகள்

(ix) விற்பனைச் செலவுகளும் நிதிச் செலவுகளும்

(x) முதல் மாதத்தில் மொத்த உற்பத்திக் கிரயத்தை கணிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட **இரண்டு** செலவுகள் அவற்றின் பெறுமதிகளுடன்

(02 × 10 = 20 புள்ளிகள்)

**2.** (i) 'முயற்சியாளர்' என்ற பதத்தைச் சுருக்கமாக விளக்குக.

(ii) மனிதத் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கிடையிலான வித்தியாசங்கள் **இரண்டு** தருக.

(iii) 'அக முயற்சியாளர்' என்பதை ஒரு உதாரணம் மூலம் விளக்குக.

(iv) சுந்தரம் என்பவர் உற்பத்தி வணிகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றார். உற்பத்திக் காரணிகளின் படி அவரது வணிகத்துக்குத் தேவையான வளங்களை வகைப்படுத்துவதுடன், அவை ஒவ்வொன்றுக்கும் உதாரணம் தருக.

(v) ஒரு நாட்டின் விவசாயத் துறை மூலம் தோன்றும் வணிக வாய்ப்புகள் **இரண்டு** தருக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

**3.** (i) முயற்சியாளர் ஒருவரால் பெற்றுக்கொள்ளக்கூடிய சமூக அனுகூலங்கள் **இரண்டு** தருக.

(ii) முயற்சியாளர் ஒருவர் தலைவர், முகாமையாளர் ஆகிய வகிபாகங்களில் நிறைவேற்றுகின்ற **ஒவ்வொரு** தொழிற்பாடு வீதம் தருக.

(iii) தற்போது இலங்கையின் முயற்சியாளர் ஒருவர் சமூக நலன் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய வாய்ப்புக்களுக்கான **இரண்டு** உதாரணங்கள் தருக.

(iv) ஒரு நாட்டின் உள்ளூர் பொருளாதார அபிவிருத்திக்காக முயற்சியாளர் பங்களிப்புச் செய்யக்கூடிய **இரண்டு** வழிகளை எழுதுக.

(v) ஊழியரிலும் பார்க்க முயற்சியாளராக இருப்பதால் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டு** தருக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

**4.** (i) வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் முயற்சியாளர் ஒருவர் எடுக்க வேண்டிய முக்கிய தீர்மானங்கள் **இரண்டு** தருக.

(ii) சரிதா என்பவர் துணிகளைச் சலவை செய்வதற்கான சலவைத் தூளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் வணிகம் ஒன்றை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்தார். இங்கு சரிதா கருத்திற்கொள்ளவேண்டிய **இரண்டு** காரணிகளைக் குறிப்பிடுக.

(iii) சந்தைக்கு வழங்கும் உற்பத்திப்பொருளொன்றின் வெற்றிகரமான விற்பனையில் தாக்கம் செலுத்தும் **இரண்டு** காரணிகளை எழுதுக.

(iv) வணிகங்கள் **இரண்டைப்** பெயரிட்டு, அவற்றுக்கு மிகவும் பொருத்தமான இடம் மற்றும் வாடிக்கையாளர் குழு ஆகியவற்றைக் குறிப்பிடுக.

(v) வெகுஜன ஊடகங்கள் மூலம் வணிக எண்ணங்கள் புத்துருவாதல் ஒரு பொதுவான சூழ்நிலை ஆகும். இதற்கு **இரண்டு** உதாரணங்கள் தருக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

5. (i) தனியுடைமை வணிகம், பங்குடைமை வணிகம் ஆகியவற்றின் பொதுவான குணாம்சங்கள் **இரண்டு** எழுதுக.

(ii) பங்குடைமை உடன்படிக்கையால் தீர்க்கக்கூடிய வகையில் பங்குடைமையில் உருவாகும் நடைமுறைப் பிரச்சினைகள் **இரண்டு** தருக.

(iii) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின்படி வரையறுத்த தனியார் கம்பனி ஒன்றின் பெயரைத் தெரிவுசெய்யும்போது **பயன்படுத்தப்படாத இரண்டு** பெயர்களை எழுதுக.

(iv) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளில் காணக்கூடிய அடிப்படைக் குணாம்சங்கள் **இரண்டு** எழுதுக.

(v) தனியுடைமை வணிகம் மற்றும் வரையறுத்த தனியார் கம்பனி தொடர்பில் பின்வருவன பற்றி முறையே எழுதுக.

(அ) ஆகக்குறைந்த அங்கத்தவர் எண்ணிக்கை

(ஆ) உடைமையாளரின் பொறுப்பு

(02 × 05 = 10 புள்ளிகள்)

6. (i) இலங்கையில் முயற்சியாண்மையினை ஊக்கப்படுத்தும் நிறுவகங்கள் **இரண்டினை** எழுதுக.

(ii) முயற்சியாண்மைக்குத் தடையாக உள்ள சமூகக் காரணிகள் **இரண்டு** தருக.

(iii) பெண்கள் முயற்சியாண்மைக்கான தடைகள் **இரண்டு** தருக.

(iv) ஒரு நாட்டில் முயற்சியாண்மைக் கலாசாரத்தை உருவாக்குவதற்கான தேவையை நியாயப்படுத்துவதற்கான **நான்கு** காரணிகளை எழுதுக.

(v) ஒரு நாட்டில் முயற்சியாண்மை கலாசாரத்தை உருவாக்கும்போது அதன் வேலைப்படைக்கு வேலையை வழங்கக்கூடிய வகையில் தற்போதைய வேலையின்மையின் தன்மை பற்றிக் கற்றுக்கொள்ள வேண்டும். இலங்கையின் தற்போதைய வேலையின்மையின் தன்மைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

7. (i) சந்தைப் பகுப்பாய்வின்போது கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் **இரண்டினை** எழுதுக.

(02 புள்ளிகள்)

(ii) பாடசாலை ஒன்றின் நிர்வாகத் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள பதவிநிலைகள் **நான்கு** தருக.

(02 புள்ளிகள்)

(iii) சுபயானின் பிரேரித்த வணிகத்தின் முதல் மாதத்திற்கான மதிப்பிடப்பட்ட காசு உள்வருகை, காசு வெளிச்செலுத்துகை என்பன கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூ. |
|---|---|
| உடைமையாளர் முதலீடு ...................................... | 200 000 |
| எதிர்பார்க்கப்பட்ட விற்பனை வருமானம் .............. | 300 000 |
| விற்பனைக்காக வாங்கிய பொருட்கள் ................... | 150 000 |
| செலுத்திய கட்டட வாடகை ................................. | 25 000 |
| சம்பளங்களும் ஏனைய செலவுகளும் ................. | 75 000 |
| வணிகத்துக்காக வாங்கிய தளபாடங்கள் .............. | 200 000 |

**வேண்டப்படுவது:**

சுபயானின் பிரேரித்த வணிகத்தின் முதல் மாதத்திற்கான மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சற் கூற்றை தயாரித்து, மொத்தக் காசு உள்வருகை, மொத்தக் காசு வெளிச்செலுத்துகை, காலப்பகுதியின் முடிவில் உள்ள காசு மீதி ஆகியவற்றைக் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]




කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න